DEVELOPMENTAL DISABILITIES ADMINISTRATION (DDA)

# நான்கு வயதில் (4) தகுதி காலாவதியாகுவது குறித்த அறிவிப்பு
## Notification of Age Four (4) Eligibility Expiration

வாடிக்கையாளர் பெயர் மற்றும் முகவரி

பிரதிநிதி பெயர் மற்றும் முகவரி

**பார்வை: நான்கு வயதில் (4) தகுதி காலாவதியாகுவது குறித்த அறிவிப்பு**

உங்களது குழந்தை, தற்போது வளர்ச்சி சார்ந்த ஊனங்கள் நிர்வாகத்தில் (Developmental Disabilities Administration (DDA)) ஒரு வாடிக்கையாளராக இருக்கிறார். உங்கள் குழந்தை, 'பிறப்பு-முதல்-மூன்று வயது வரை' திட்டத்தில் அல்லது 'மெடிக்கல்லி இண்டென்சிவ் சில்ட்ரென்ஸ் புரோக்ராமில்' பதிவு செய்திருப்பதன் காரணமாகவே அவர் DDA-வில் தகுதியடைந்திருக்கலாம். DDA-வில் உங்கள் குழந்தை தகுதிபெறுவது, அவரது நான்காவது பிறந்த நாளில் காலாவதியாகிவிடுகிறது. உங்கள் குழந்தை தொடர்ந்து DDA-வில் தகுதியானவராக இருப்பதற்கு, உங்களது குழந்தைக்கு நான்கு வயது ஆவதற்கு முன்பாகவே நீங்கள் மறுபடியும் விண்ணப்பித்தாக வேண்டும். இணைத்துள்ள, 'தேவையான ஆவணங்கள் அட்டவணையில்' பட்டியலிட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்றின் காரணமாகவே, உங்களது குழந்தையைத் தகுதியானவர் என்று மறு-தீர்மானித்தாக வேண்டியுள்ளது.

**எவ்விதம் மறுபடியும் விண்ணப்பிப்பது:**

மறு-விண்ணப்பப் படிவங்கள் தொகுப்பு ஒன்று வேண்டுமெனக் கேட்க, உங்களது குழந்தையின் நான்காவது பிறந்த நாளுக்குக் குறைந்தது 90 நாட்களுக்கு முன்பாகவே, DDA 'உள்ளெடுப்பு & தகுதிகாணும்' ஊழியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் இதனை எழுத்துப் பூர்வமாகவோ அல்லது கீழே பட்டியலிட்டுள்ள தொலைபேசி எண்ணில் அழைப்பதன் மூலமாகவே கேட்கலாம். உங்களுக்கு விண்ணப்பத் தொகுப்பு ஒன்றை அஞ்சல் செய்து வைப்போம். நீங்கள் விண்ணப்ப ஆவணங்களை இந்த முகவரியில் ஆன்லைனிலும் பெறலாம்: https://www.dshs.wa.gov/dda/consumers-and-families/eligibility.

**நான் மறுபடியும் விண்ணப்பிக்காமல் போனால் என்னாகிறது?**

நீங்கள் மறுபடியும் விண்ணப்பத் தொகுப்பு வேண்டுமென வேண்டுகோள் விடுக்கவில்லை என்றாலோ அல்லது அவ்விண்ணப்பத்தை உங்களது குழந்தையின் தகுதி முடிவதற்குக் குறைந்தது 60 நாட்களுக்கு முன் திருப்பி அனுப்பவில்லை என்றால், அவரது தகுதி அவரது நான்காவது பிறந்த நாள் அன்று காலாவதியாகிவிடும். உங்கள் குழந்தை DDA-வில் பணம் செலுத்திப் பெறும் சேவைகளைப் பெற்றுக் கொள்கிறார் என்றால், இந்தச் சேவை அவரது நான்காவது பிறந்தநாள் அன்றோடு முடிவடைந்துவிடும்.

**உங்களது குழந்தையின் தகுதி DDA-வில் காலாவதியாகி விடுவது, பிரத்தியேகக் கல்வித் திட்டங்கள் அல்லது SSI திட்டங்களில் தகுதிபெறுவதைப் பாதிப்பதில்லை. அல்லது அது, நீங்கள் பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய மெடிக்கெய்டு, TANF அல்லது ஃபுட்ஸ் ஸ்டாம்ப்ஸ் போன்ற மற்ற DSHS சேவை எதையும் பாதிப்பதில்லை.**

தயவுசெய்து கூடிய விரைவில், ஆனால் உங்களது குழந்தையின் நான்காவது பிறந்த நாளுக்குக் குறைந்தது 90 நாட்களுக்கு முன்பே பதிலளியுங்கள். உங்களிடமிருந்து எங்களுக்குப் பதில் கிடைக்கவில்லை என்றால், DDA-வில் உங்களது குழந்தைத் தொடர்ந்து தகுதிபெறுவது உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதாகவே நாங்கள் எடுத்துக் கொள்வோம். நான்காம் (4) வயது வாக்கில் தகுதியுள்ள நிலைமை ஒன்றை முறையாக ஆவணப்படுத்தவில்லை என்றால், DDA-வில் உங்களது குழந்தையின் தகுதியும், DDA சேவைகளும் அவரது நான்காம் (4 ஆவது) பிறந்த நாளில் காலாவதியாகிவிடும்.

உங்களிடம் கேள்விகள் ஏதுமிருக்குமானால் அல்லது விண்ணப்பத்தொகுப்பு ஒன்றை வேண்டிப்பெற விரும்பினால், தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள்

| பெயர் | தொடர்பு எண் | மின்-அஞ்சல் முகவரி |
|---|---|---|

தகுதிபெறுவதைக் கட்டுப்படுத்துகிற மாநில அரசு விதிகளின் நகல் ஒன்று, வேண்டுகோளின் பேரில் அல்லது https://www.dshs.wa.gov/dda/consumers-and-families/eligibility என்ற முகவரியில் ஆன்லைனில் கிடைக்கிறது.

நகல்: வாடிக்கையாளர் கோப்பு

**தேவையான ஆவணங்கள் அட்டவணை**

| ஊன நிலைமை | வயது | கண்டறிந்த நோய் | நோயைக் கண்டறிந்தவர் | மற்ற பதிவுகள் |
|---|---|---|---|---|
| வளர்ச்சி சார்ந்த தாமதம் | வயது 4 முதல் 9 முடிய | வளர்ச்சி சார்ந்த தாமதம் | வளர்ச்சி சார்ந்த மதிப்பீடுகள் அல்லது மதிப்பாய்வுகளை நடத்தத் தகுதிபெற்ற சிறப்புநிபுணர் ஒருவர் | வயது 4 முதல் 9 முடிய – கடந்த 12 மாதங்களுக்குள்ளாக செய்த தற்போதைய மதிப்பீடு ஒன்றின் அடிப்படையில், ஆண்டு எண்ணிக்கை வயதின் -1.5 SD அல்லது 25 % அளவில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தாமதங்கள். |
| மருத்துவ ரீதியாக தீவிர நிலையில் உள்ளவர் | பிறப்பு முதல் 17 வயது முடிய | | | 'மெடிக்கல்லி இண்டென்சிவ் சில்ட்ரென்ஸ் புரோக்ராமிற்கு'த் தகுதியடைகிறார். |
| அறிவுக்கூர்மை ஊனம் | 4 வயது அல்லது அதைவிட அதிகம் | அறிவுக்கூர்மை ஊனம் (முன்னர் மனவளர்ச்சிக் குறைவு) | உரிமம் பெற்ற மனோதத்துவ நிபுணர், வாஷிங்டன் செர்ட்டிஃபைடு ஸ்கூல் சைக்காலஜிஸ்ட் அல்லது நேஷனல் அசோசியேஷன் ஆஃப் ஸ்கூல் சைக்காலஜிஸ்ட் சான்று பெற்ற மற்ற கல்லூரி மனோதத்துவ நிபுணர் | முழு மனோதத்துவ அறிக்கை, சராசரிக்குக் கீழே இரண்டு எப்போதும் போன்ற விலகல்களுக்கு மேல், முழு அளவுகோல் ஐக்யூ மதிப்பெண் இருப்பது, அதோடு ஏற்புத் திறமைகள் பரீட்சை மதிப்பெண், சராசரிக்குக் கீழே இரண்டு எப்போதும் போன்ற விலகல்களுக்கு மேல் இருப்பது உட்பட. |
| பெருமூளையின் முடக்குவாதம் | 4 வயது அல்லது அதைவிட அதிகம் | பெருமூளையின் முடக்குவாதம் குவாட்ரிப்ளீஜியா ஹெமிப்ளீஜியா டைப்ளீஜியா | உரிமம் பெற்ற மருந்து மருத்துவர் | 3 ஆம் வயதிற்கு முன்பே துவங்கி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளில் அன்றாட நேரடி உடல் ரீதியிலான உதவி (கழிவறைக்குச் செல்லுதல், குளித்தல், சாப்பிடுதல், உடையணிதல், இங்குமங்கும் செல்லுதல், அல்லது தகவல் தொடர்பு கொள்ளுதல்) தேவையாக இருப்பதை ஆதரிக்கிற தகவல். |
| கால்கை வலிப்பு | 4 வயது அல்லது அதைவிட அதிகம் | கால்கை வலிப்பு அல்லது இழுப்புக் கோளாறுகள் | வாரியம் சான்றுபெற்ற நரம்பியல் மருத்துவர் | மருத்துவ வரலாறு அடிப்படையிலும், நரம்பியல் பரிசோதனை அடிப்படையிலும் நோயைக் கண்டறிந்து, கட்டுப்படுத்த முடியாத, தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிற அல்லது திரும்பத் திரும்ப வருகிற இழுப்புகள் குறித்து மருந்து மருத்துவர் அல்லது நரம்பியல் மருத்துவரிடமிருந்து உறுதிப்படுத்தலைப் பெறுவது, அதோடு ஏற்புத் திறமைகள் பரீட்சை, சராசரிக்குக் கீழே எப்போதும் போன்ற இரண்டு விலகல்களுக்கு மேல் ஏற்புச் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகளைக் காண்பித்தல். |
| மதியிறுக்கம் (Autism) (ஒரு DSM-IV-க்கு) | 4 வயது அல்லது அதைவிட அதிகம் | செவித்திறன் இன்மை அல்லது செவிக் கோளாறு DSM-IV-TR-ல் ஒரு 299.00-க்கு | உரிமம் பெற்ற மனோதத்துவ நிபுணர் ஒருவர், செவித்திறன் இன்மை அல்லது வளர்ச்சி மையத்தோடு தொடர்புடைய அட்வான்ஸ்டு ரெஜிஸ்டெர்டு நர்ஸ் பிராக்டீசனர் (ARNP) அல்லது வாரிய சான்று பெற்ற: நரம்பியல் மருத்துவர், மனோதத்துவ மருத்துவர், அல்லது வளர்ச்சி அல்லது பழக்கவழக்கம் சார்ந்த குழந்தைகள் மருத்துவர் | ஒரு DSM-IV-க்கு, அனைத்து நோய்கண்டறியும் வரன்முறைகளையும் சந்திக்கிற முழு மதிப்பாய்வு, சமுதாய, மொழி, தகவல்தொடர்புத் திறமைகள் அல்லது அடையாளம் சார்ந்த அல்லது கற்பனைகரமான விளையாட்டு ஆகியவற்றில் 3 ஆம் வயதிற்கு முன்பாக தாமதமான அல்லது இயல்பிற்கு மாறான செயல்பாட்டிற்கான தடயம், மற்றும் ஏற்புத் திறன் பரீட்சை, சராசரிக்குக் கீழே எப்போதும் போன்ற இரண்டு விலகல்களுக்கு மேல் ஏற்புச் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகளைக் காண்பித்தல். |
| மதியிறுக்கக் கோளாறு (Autism Spectrum Disorder (ASD)) (ஒரு DSM-V-க்கு) | 4 வயது அல்லது அதைவிட அதிகம் | மதியிறுக்கக் கோளாறு 299.00 ஒரு DSM-க்கு-5, இரண்டு கட்டங்களிலும் 2 அல்லது 3 கடுமை அளவுகள் உட்பட | உரிமம் பெற்ற மனோதத்துவ நிபுணர் ஒருவர், செவித்திறன் இன்மை அல்லது வளர்ச்சி மையத்தோடு தொடர்புடைய அட்வான்ஸ்டு ரெஜிஸ்டெர்டு நர்ஸ் பிராக்டீசனர் (ARNP) அல்லது வாரிய சான்று பெற்ற: நரம்பியல் மருத்துவர், மனோதத்துவ மருத்துவர், அல்லது வளர்ச்சி அல்லது பழக்கவழக்கம் சார்ந்த குழந்தைகள் மருத்துவர் | ஒரு DSM-V-க்கு, அனைத்து நோய்கண்டறியும் வரன்முறைகளையும் சந்திக்கிற முழு மதிப்பாய்வு, சமுதாய, மொழி, தகவல்தொடர்புத் திறமைகள் அல்லது அடையாளம் சார்ந்த அல்லது கற்பனைகரமான விளையாட்டு ஆகியவற்றில் 3 ஆம் வயதிற்கு முன்பாக தாமதமான அல்லது இயல்பிற்கு மாறான செயல்பாட்டிற்கான தடயம், மற்றும் ஏற்புத் திறன் பரீட்சை, சராசரிக்குக் கீழே எப்போதும் போன்ற இரண்டு விலகல்களுக்கு மேல் ஏற்புச் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகளைக் காண்பித்தல் அதோடு சராசரிக்குக் கீழே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எப்போதும் போன்ற FSIQ விலகல் - அல்லது - ஒரு DSM-IV-க்கு மதியிறுக்கக் கோளாறு 299.00-க்கு அனைத்து வரன்முறைகளையும் சந்தித்தல். |
| அறிவுக்கூர்மை ஊனத்தை ஒத்த இன்னொரு நரம்பியல் அல்லது மற்ற நிலைமை | 4 வயது அல்லது அதைவிட அதிகம் | அறிவுக்கூர்மை அல்லது ஏற்புத் திறன்கள் குறைபாடுகளை உண்டாக்குவதாகத் தெரிந்த நரம்பியல் அல்லது குரோமோசோம் சார்ந்த கோளாறு | உரிமம் பெற்ற மருந்து மருத்துவர் | சராசரிக்குக் கீழே 1.5-க்கு மேற்பட்ட எப்போதும் போன்ற விலகல்கள் கொண்ட முழு அளவுகோல் ஐக்யூ மதிப்பெண் இருப்பது, அதோடு ஏற்புத் திறமைகள் பரீட்சை, ஏற்புச் செயல்பாட்டில் சராசரிக்குக் கீழே இரண்டு எப்போதும் போன்ற விலகல்களுக்கு மேல் இருப்பபதைக் காண்பிப்பது. |

**குறிப்பு:** **இந்தப் படிவம் ஒரு பொதுவான வழிகாட்டி மட்டுமே, அதோடு,** *DDA*-**க்கு கூடுதல் தகவல்கள் அல்லது மதிப்பீடுகள் அவசியமாகலாம். இந்த ஆவணம் தான், தகுதியைத் தீர்மானிப்பதில் முதல் படியாகும்.** *DDA* **தகுதியை,** *WAC* **அத்தியாயம்** *388-823* **என்ற விதிப்படியே தீர்மானிக்கிறார்கள்.**